**செய்திவெளியீடுஎண்:170** **நாள்:25.02.2021**

**<u>இன்று (25.2.2021), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கோயம்புத்தூர், கொடீசிய வளாகத்தில். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு . நரேந்திர மோடி அவர்கள் கலந்து கொண்டு, புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் திட்டம், மின் உற்பத்தித் திட்டங்கள், கீழ் பவானி கால்வாய் நவீனப்படுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான துவக்க மற்றும் அடிக்கல் நாட்டிய விழாவில் ஆற்றிய உரை:</u>**

உழைக்கும் மக்களின் ஒப்பற்ற தாய், எங்கள் குல தெய்வம், சரித்திரம் பேசும் சாதனைத் தலைவி, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

கீழ் பவானி கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இன்று துவக்கி வைக்கவும், அடிக்கல் நாட்டவும் வருகை புரிந்துள்ள

மாண்புமிகு பாரதப் பிரதமர் **திரு. நரேந்திர மோடி ஜி அவர்களே !**

இந்த நிகழ்ச்சியில் முன்னிலை வகித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு ஆளுநர்

**திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய

மாண்புமிகு நாடாளுமன்ற விவகாரம், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் அமைச்சகத்தின்

**மத்திய அமைச்சர் திரு.பிரகலாத் ஜோஷி அவர்களே!**

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்

**திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!**

இந்த சீர்மிகு விழாவில் பங்கேற்றுள்ள

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்

**சகோதரர் திரு. S.P. வேலுமணி அவர்களே!**

**மாண்புமிகு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!**

**முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!**

**உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகளே!**

**அரசுத் துறை உயர் அதிகாரிகளே!**

**பல்வேறு கட்சிகளின் தலைவர்களே!**

**சிறப்பு அழைப்பாளர்களே!**

**பெரியோர்களே! தாய்மார்களே!**

**பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!**

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அழைப்பின் பேரில், **14.2.2021** அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் பல்வேறு முடிவடைந்த திட்டங்களைத் துவக்கி வைக்கவும், வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் சென்னை மாநகருக்கு வருகை தந்து சிறப்பித்தார்கள்.

I extend a hearty welcome to the Hon'ble Prime Minister who has come to Coimbatore for inaugurating and laying foundation stone for various projects.

I would like to inform the Hon'ble Prime Minister that our Government has taken a series of measures to reduce the sufferings of people during the pandemic, including cash assistance to general public and to the members of various welfare boards. Even during the pandemic, Tamil Nadu received higher share of investments proposals in India, as per CARE ratings and has also been **ranked number one State by the Projects Today in attracting investments during pandemic.**

வரலாற்று சிறப்புமிக்க குடிமராமத்து திட்டம், காவேரி டெல்டா பகுதிகளில் சிறப்பு தூர்வாரும் திட்டம், விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டம், ஆயிரம் கோடி ரூபாயில் புதிய தடுப்பணைகள் கட்டும் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம், அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம், அத்திகடவு–அவினாசி திட்டம், காவேரி ஆற்றின் குறுக்கே புதிய கதவணைகள் கட்டும் திட்டம், காவேரி–குண்டாறு இணைப்பு திட்டம், தாமிரபரணி–கருமேனியாறு மற்றும் நம்பியாறு இணைப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி **மாண்புமிகு அம்மாவின் அரசு, நீர் மேலாண்மையில் சிறந்த முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது.**

தமிழ்நாட்டின் நீர்வளத்தை பெருக்க, நீரை முறையாக பயன்படுத்த, மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு உட்கட்டமைப்புகளை புதிதாக ஏற்படுத்தியும், மேம்படுத்தியும் வருகிறது. அந்த வகையில் **934 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கீழ்பவானி கால்வாயை**

**நவீனப்படுத்தும் திட்டத்திற்கு** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்ட உள்ளார்கள்.

கீழ்பவானி பாசன திட்டமானது, கீழ்பவானி வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால், அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால் ஆகியவற்றை உள்ளடக்கியது. இதில் காலிங்கராயன் வாய்க்கால், சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டமைக்கப்பட்டவை ஆகும். மேற்குறிப்பிட்ட வாய்க்கால்களின் உறுதித்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும், முழுமையான பாசனப்பரப்பிற்கு நீர் செல்வதை உறுதிபடுத்தவும், வாய்க்கால்களின் நீர்க்கசிவை வெகுவாகக் குறைத்து கடைமடை வரை தண்ணீர் செல்வதை உறுதி செய்யவும், 934 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், வலுவிழந்த நிலையில் உள்ள கரைகளை, கான்கிரீட் பலகைகள் மற்றும் தடுப்புச்சுவர் கொண்டு பலப்படுத்துதல், குறுக்கு கட்டுமானங்கள் புனரமைப்பு மற்றும் மறுகட்டுமானம் செய்தல், சேதமடைந்த பாலங்களை மறு கட்டுமானம் செய்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 401 கி.மீ. நீளமுள்ள கால்வாய்கள் நவீனப்படுத்தப்பட்டு, சுமார் 2,47,247 ஏக்கர் பரப்பளவு பாசன நிலங்கள் பயனடையும்.

I request the Hon'ble Prime Minister to extend necessary funding for the lower Bhavani irrigation projects and other irrigation projects of Tamil Nadu.

I take this opportunity to request the Hon'ble Prime Minister to declare the Godavari–Cauvery River linking projects as a National project so as to benefit lakhs of people in Telangana, Andhra Pradesh and Tamil Nadu.

The river Cauvery and its branch rivers have to be rejuvenated on the lines of "Namami Gange". Government of India is requested to accord sanction and extend financial assistance to Tamil Nadu at the earliest.

தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் உள்ளிட்ட 11 பெரிய நகரங்கள் 'சீர்மிகு நகரங்கள்' திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநில அரசின் பங்களிப்பாக 500 கோடி ரூபாய், மத்திய அரசின் பங்களிப்பாக 500 கோடி ரூபாய், ஆக மொத்தம் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள், ஒவ்வொரு நகரத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்து சீர்மிகு நகரங்களிலும் 24 மணி நேர சேவையை பொது மக்களுக்கு வழங்கிடும் வகையில் **"ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு மையம்"** அமைக்கப்பட உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் இதற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 8 சீர்மிகு நகரங்களில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு மைய பணிகள் மேற்கொள்வதற்கு, 92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இன்று அடிக்கல் நாட்டப்பட உள்ளது. இதன் மூலம் சீர்மிகு நகரங்களில், பொதுமக்களுக்கான சேவை மேலும் மேம்படும்.

தென் மாவட்டங்களில் தொழில் வளத்தை மேம்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இம்மாதம், என்னால் வெளியிடப்பட்ட **புதிய தொழில் கொள்கை 2021–**இன் மூலம் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும், குறிப்பாக தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள தென் மாவட்டங்களில், தொழில் வளத்தை மேம்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு தெளிவான பாதையை வகுத்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள பெரிய துறைமுகமான வ.உ.சி. துறைமுகத்தில் **புதியதாக 5 மெகாவாட் சூரிய மின் சக்தி நிலைய திட்டத்திற்கு** மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது.

மேலும், தூத்துக்குடி துறைமுகத்திற்கு அருகிலுள்ள கோரப்பள்ளம் இரயில்வே பாலம் மற்றும் அதன் இணைப்பு சாலை விரிவாக்க பணிகள் 42 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இன்று துவக்கி வைக்கப்பட உள்ளது.

நாட்டின் மிகவும் நகரமயம் ஆக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 48.45 விழுக்காடு மக்கள் நகரப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். எனவே, தமிழ்நாட்டு மக்களுக்கு பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் மூலம் வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்பாக உள்ளது. தற்போது, பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மொத்தம் 331.81 கோடி ரூபாய் செலவில்,

- ❖ திருப்பூர் மாவட்டத்தில் வீரபாண்டி நகரில் 1,280 அடுக்குமாடி குடியிருப்புகளும்,
- ❖ திருக்குமரன் நகரில் 1,248 அடுக்கு மாடி குடியிருப்புகளும்,
- ❖ மதுரை மாவட்டத்தில் இராஜாக்கூர் பகுதியில் 1,088 அடுக்குமாடி குடியிருப்புகளும்,
- ❖ திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருங்களூர் பகுதியில் 528 அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்பட்டு இன்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட உள்ளன.

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 67 ஆயிரத்து 328 அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கும், 4 லட்சத்து 59 ஆயிரத்து 56 தனி வீடுகளுக்கும், 30,525 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடியிருப்பும் 400 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டு, தார் சாலைகள், தெரு மின்விளக்குகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற அடிப்படை வசதிகளுடன், நியாயவிலை கடைகள், குழந்தைகள் காப்பகம், நூலகம் மற்றும் கடைகள் ஆகிய சமூக வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

I thank the Hon'ble Prime Minister for sanctioning 6,95,387 houses for urban Tamil Nadu.

NLC நிறுவனத்தால் நெய்வேலியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரண்டு 500 மெகாவாட் அனல் மின் திட்டங்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 709 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார்கள்.

Due to the various initiatives of Amma's Government, Tamil Nadu has become a power surplus State. Dedication of thermal and solar power projects of NLC will further improve the installed power capacity of Tamil Nadu and will further help in the industrialisation efforts.

ஆக மொத்தம், 1,073 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், 11,391 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 திட்டங்களைத் துவக்கி வைத்தும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உதவிய, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு

என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

I request Hon'ble Prime Minister to facilitate sanction of Coimbatore Metro Rail Project under 50:50 Joint Venture partnership basis between Government of India and Government of Tamil Nadu, as was done for Chennai Metro Rail Project. At present, day flights are being operated from Salem and Tuticorin Airports, request for allowing night flight services also. The expansion of Madurai and Coimbatore Airports may be expected. Coimbatore is a commercial hub and export centre, therefore, direct flights to Dubai and back may be operated weekly.

இந்த நிகழ்ச்சியினை சிறந்த முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

I, once again, thank the Hon'ble Prime Minister for accepting my invitation for inauguration and laying foundation stone for various projects in Coimbatore today.

நன்றி !

வணக்கம் !!

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**